Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

தனிப்பிரதி ரூ. 5/-
Reg. No. KKI/63/2015-2017

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 63 கர்த்தாவே, தாவீதையும் அவனுடைய சகல உபத்திரவத்தையும் நினைத்தருளும் சங்.132:1 அக்டோபர் 2017 No.10

இழந்து போன ஆத்துமாக்களைக் குறித்த வியாகுலம்

The lost agony for souls

H.C.Van wormer

"ஜியார்ஜ் உவைட்ஃபீல்டு இவ்வாறு கதறினார்: ஆத்துமாக்களைத் தாரும் அல்லது எனது ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும். . . . . ஆத்துமாக்களைக் குறித்த பாரம், மனிதரைக் குறித்த ஆழமான அக்கரை, தேவனுடைய மந்தையைக் குறித்த கரிசனை இவை வார்த்தைகளையும், பெருமூச்சுகளையும், கண்ணீர்களையும் வரவழைக்கின்றன".

தற்கால வாகனங்கள் இல்லாத காலத்திலே வாழ்ந்த ஒரு முதிர்வயதான பக்தன் தனது குதிரையைப் பூட்டி இருபது மைல்கள் பிரயாணம் பண்ணி தேவனிடமிருந்து விலகிக் கொண்டிருந்த ஒரு மனிதனோடு ஜெபிப்பதற்காக பிற்பகல் வேளையிலே தனது வேலையின் மத்தியில் செல்வாராம். "நான் இதைத் தவிர்க்க முடியவில்லை, அவன் மீதுள்ள அன்பும், கரிசனையும் அவ்வளவு அதிகமாயிருந்தபடியால் அவனை தேவனிடம் கொண்டு வருவது வரை என்னாலியன்றதை செய்யாமல் என்னால் இளைப்பாற முடியவில்லை" என்று அவர் கூறியிருக்கிறார். இத்தகைய ஆத்தும பாரம் நமக்கு வேண்டும்.

டேவிட் பிராய்னார்டுவின் வார்த்தைகளில், "ஆத்துமாக்களை இரட்சிப்பதற்காக எங்கு போக வேண்டும், அல்லது எப்படி வாழ வேண்டும், எதை சகிக்க வேண்டும் என்பதைக் குறித்து எனக்குக் கவலையில்லை. நான் தூங்கும் போது அவர்களை சொப்பனத்தில் காண்கிறேன்; நான் விழிக்கும் போது முதலில் என் எண்ணத்தில் வருபவர்களும் அவர்களே. . . எந்த அளவிலான புலமைகளும், திறமைகளும், பேச்சு வன்மையும் கூட மனித ஆத்துமாக்கள் பேரிலுள்ள ஆழமான அன்பு, இரக்கம், பாரம் இவற்றிற்கு ஈடாகாது" இப்படிக் காண்கிறோம்.

வேல்ஸ் எழுப்புதலில் ஆத்தும வியாகுலம்

ஒருநாள் மாலை Dr.F.B.மேயர் ஒரு இளைஞனான ஊழியக்காரர் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தில் வருவதைக் கண்டார். அது வேல்ஸ் மகா எழுப்புதலின் காலம். அவர் நின்று கொண்டு தனக்குப்பின் பரிகசித்துக் கொண்டு வந்து கொண்டிருந்த இரு தோழர்களுக்காக தேவனை நோக்கி ஜெபித்தார். இந்த இருவர்களில் ஒருவன் எழுந்து, "அல்ல அது சரியல்ல; நான் பரிகசிக்கவில்லை, நான் ஒரு நாஸ்திகனல்ல, நான் ஒரு தேவனற்றவன், தேவன் என்னை இரட்சிக்க விரும்பினால் அவருக்கு ஒரு நல்ல தருணத்தைக் கொடுக்கிறேன். அவர் செய்யட்டும் என்று மட்டுமே சொன்னேன்" என்றான்.

இந்தப் பெருமையான சொற்கள் ஈவன் ராபர்ட்ஸை தொட்டன. அவர் பூரண வியாகுலத்துடன் முழங்காலில் விழுந்தார். இந்த மனிதனுடைய பாவத்தின் பாரத்தினால் அவரது இருதயமே நொறுங்கி விடுவது போலிருந்தது.

Dr.மேயரது நண்பர் அருகில் நின்று கொண்டு, "இது மிகவும் பயங்கரமானது, இந்த மனிதன் இவ்வாறு புலம்புவதை நான் சகிக்க முடியாது. இந்த சத்தத்தை அமிழ்த்த நான் ஒரு இசை மீட்டுகிறேன்" என்றார்.

Dr.மேயர், "இது என் உள்ளத்தின் ஆழத்தில் அமிழ வாஞ்சிக்கிறேன். உலர்ந்த கண்களோடு 30 ஆண்டுகள் சுவிசேஷத்தை அறிவித்திருக்கிறேன். திரள் கூட்டமான மக்களில் எந்த மாற்றமும் ஏற்படாமல் பேசியதில்லை. இந்த மனிதனது விருப்பம் என் ஆத்துமாவை தொட வேண்டும்" என்றார்.

ஈவான் ராபர்ட்ஸ் அழுது கொண்டேயிருந்தார். மேயர், "தேவனே இந்த அழுகையை நான் கற்றுக் கொள்ளட்டும், மனிதருக்கு நான் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது என் ஆத்துமா உடையத்தக்கதாக கண்ணீர் விட நான் கற்றுக் கொள்ளட்டும்" என்றார்

பரத்துக்கும் நரகத்துக்கும்மிடையிலான போர்

பத்து நிமிடங்களுக்குப் பிறகு எழுந்து ராபர்ட்ஸ் மக்களோடு பேசினார், 'விட்டுக் கொடுப்பீர்களா?' என்று அவர் கேட்க 'நாங்கள் ஏன் பணிய வேண்டும்?' என பதில் வந்தது. தொடர்ந்த அவர் 'நாம் ஜெபிப்போம்' என்றார். எங்கும் பெருமூச்சுகளும், கண்ணீரும், புலம்பல்களும் நிறைந்தது. அனைவரும் இந்த இருவரையும் தங்கள் இருதயங்களில் சுமந்தனர். அந்த பாரத்தால் அவர்கள் இருதயம் நொறுங்குவது போலிருந்தது. Dr.மேயர் இவ்வாறு ஒருபோதும் கண்டதில்லை என்று இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் திடீரென குதித்து எழுந்து, நண்பரைப் பார்த்து, 'பரத்துக்கும் நரகத்துக்கும் இடையிலான யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறோம். பரலோகம் ஒரு புறமாகவும் நரகம் இன்னொரு புறமாகவும் இருப்பதைக் காணவில்லையா?" என்றார்.

அந்த இருவரில் ஒருவர் ஆண்டவரை ஏற்றுக் கொண்டார். மற்றவர் மனந்திரும்பாத சிலுவைக் கள்ளனைப் போல வீடு சென்றார். ஆயினும் பின் நாட்களில் அவரும் தேவனுடைய பிள்ளையாகி விட்டார்.

வேல்ஸ் எழுப்புதலில் இவ்வாறு மனிதர் மனந்திரும்பினால் இன்று அப்படி நடக்க முடியாதா?

மிகப் பெரிய மெதடிஸ்ட் சுவிசேஷகன் ஜான்வெஸ்லி. அவரது ஊழிய காலத்தில் நூற்றுக்கணக்கானோர் தேவனிடத்தில் கொண்டு வரப்பட்டனர். அந்நாட்களில் ஆத்தும வியாகுல முள்ள மக்கள் இருந்தனர்.

ஒருநாள் இரவு ஜான்வெஸ்லி ஆத்தும பாரத்தால் நிறைந்து காணப்பட்டார். முற்கால தீர்க்கதரிசிகளைப் போல உரக்க சத்தமிட வேண்டும் போலிருந்தது. ஆனால் அவரால் முடியவில்லை. பொறுக்க முடியாதவராக ஆலயத்திற்கு வெளியே செல்ல முற்பட்டார். ஆனால் தூய ஆவியானவர் அவரைப் போகவிடவில்லை. எனவே, 'ஆண்டவரே நான் அடக்கிக் கொள்ள முயற்சிக்கிறேன்' என்று சொல்லி விட்டு, 'தேவனே இந்த மக்கள் இரட்சிக்கப்பட வேண்டுமே' எனக் கதறினார். ஒரு பெரிய விடுதலை அவருக்குள் ஏற்பட்டது. சபை முழுவதும் அசைவு ஏற்பட்டது. நாலாபுறமும் இரக்கத்திற்காகக் கெஞ்சும் குரலும் சந்தோஷ ஒலிகளும் எழும்பின. இந்தக் கூடுகையின் மூலம் நூற்றுக் கணக்கானவர்கள் தேவனிடம் சேர்க்கப் பட்டனர். அந்த எழுப்புதல் ஆழமானதாயிருந்தபடியால் பல வருடங்களுக்குப் பின்பும் அதின் கனிகள் இன்றும் நிலைத்திருக்கின்றன.

ஃபின்னியின் நாட்களில் ஏற்பட்ட எழுப்புதலின் இரகசியம் அவரும் சிலரும் ஆத்துமாக்களுக்காக வேதனைப் படுவது எப்படி என்று அறிந்திருந்தனர். "சீயோனோவெனில் ஒருமிக்க வேதனைப் பட்டும், தன் குமாரரைப் பெற்றும் இருக்கிறது" ஏசா.66:8.

ஃபின்னி இப்படிக் கூறுகிறார்: "அதிக வியாகுலம் என்னில் பாரமாய் இறங்கிற்று. எனது அறைக்கு நான் திரும்பியபோது, என்னுள்ளிருந்த பாரத்தால் நான் தள்ளாடுவது போலத் தோன்றியது.

(3-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S. Devadason 1955-1999)

முகவரி: வருகையின் தூதன், நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் 629 001
Mobile: 95432 21008 e.mail:varukayinthoothan@hotmail.com

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

வாக்குத்தத்தம்

இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது *ஏசாயா 49:16.*

வாசகருக்கு என் அன்பு கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதான மும் உண்டாவதாக.

வருடத்திற்கு ஒருமுறை மாத்திரம் வருகையின் தூதன் வாசகருக்கு, ஊழியத்தின் தேவைகளை தெரிவிப்பது எனது வழக்கம்.

தூதன் ஊழிய முன்னேற்றப்பணி

இதில் மூன்று விதமான பணிகள் உண்டு

1. ஊழியத்திற்கான கட்டடங்கள்: *1999*-ம் ஆண்டு ஆரம்பித்த "**தேவனுடைய வீடு**" கட்டடபணிகள் இன்னமும் நிறைவு பெறவில்லை. மேலும் பழைய கட்டடங்கள் பழுது பார்க்கப்பட்டு வர்ணம் பூசப்பட வேண்டும்.

2. ஊழியத்திற்கான கம்பியூட்டர்கள்: தேவ தயவால் சமீபத்தில் இரண்டு கம்பியூட்டர்கள் வருகையின் தூதன் அலுவலகத்திற்கும், ஒரு கம்பியூட்டர் அச்சு பணிக்கும் வாங்கியுள்ளோம்.

3. ஊழியத்திற்கான அச்சு இயந்திரங்கள்: *1998*-ம் ஆண்டு வாங்கப்பட்ட பழைய வெளிநாட்டு அச்சு இயந்திரம் சுமார் *10* ஆண்டுகள் ஓடின பின்பு பழைய விலைக்கு விற்கப்பட உள்ளது. தற்சமயம் ஓடிக் கொண்டிருக் கும் அச்சு இயந்திரம் மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே புது அச்சு இயந்திரம் வாங்கப்பட வேண்டும்.

இதுவரை இவற்றிற்கான செலவினங்களை, வருகையின் தூதன் பொதுவான கணக்கில் இருந்தே செலவு செய்து வந்தோம். இப்பொழுது தனி வங்கி கணக்கு ஆரம்பித்துள்ளோம். அதன் விபரம்:

Wesley Devadason
A/C No: **61822200136904** IFSC Code: **SYNB0006182**
சிண்டிகேட் வங்கி, பெண்கள் கிறிஸ்தவ கல்லூரி சாலை, நாகர்கோவில்

எழுப்புதலுக்காக இதய கதறல் - 2018

நாம் இதுவரை தமிழ்நாடு எங்கும் நடத்திய உபவாச ஜெபங்களை, கர்த்தருக்குச் சித்தமானால் பிற மாநிலங்களி லும் நடத்த வேண்டுமென்ற பாரத்தை தேவன் கிருபையாய் தருகிறார். எனவே பிரயாண வசதிகளை ஒழுங்கு பண்ணவும், பிற செலவினங்களுக்காகவும் இந்த உபவாச ஊழியத்திற்கென்று தனி வங்கி கணக்கு ஆரம்பித்துள்ளோம். அதன் விபரம்:

Wesley Devadason
A/C No: **370601000002557** IFSC Code: **IOBA0000063**
IOB, கோர்ட் ரோடு, நாகர்கோவில்

(முக்கிய குறிப்பு: இந்த வங்கி கணக்குகளை நாங்கள் மாதந்தோறும் பத்திரிகையில் வெளியிடமாட்டோம்.)

நீங்கள் அனுப்பும் அனைத்து கடிதங்கள், காணிக்கைகள், மணியாடர்களை நானே நேரிடையாய் பெற்றுக் கொள்கிறேன். அதனை பதிவு செய்யவும், மேற்பார்வை செய்யவும் எனக் கென்று சொந்தமாக டயரி வைத்துள்ளேன். உடனடியாக அதில் பதிவு செய்து வைத்துக் கொள்கிறேன். இது உங்களை நினைவு கூரவும் எனக்கு மிகுந்த அனுகூலமாய் இருக்கிறது.

மாதந்தோறும் காணிக்கை அனுப்புகிறவர்கள் விரும்பி னால் உடனே தொலைபேசி அல்லது SMS வழியாக தெரிவிக்க நாங்கள் ஆயத்தமாய் இருக்கிறோம். மாதந்தோறும் காணிக்கை அனுப்புகிறவர்களுடைய ரசீது இனிமேல் *3* மாதங்களுக்கு ஒருவிசை அனுப்பப்படும்.

2018-ம் ஆண்டும் வருகையின் தூதன் மாத பத்திரிகையை நீங்கள் பெற்றுக் கொள்ள விரும்பினால் தயவு செய்து கீழே அச்சிட்டிருக்கும் தகவல்களை **உடனே** தபால், மின் அஞ்சல், குறுந்தகவல் (SMS), மணியாடர் கூப்பன் போன்ற ஏதாவது ஒரு வழியில் அலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு அன்பாய் அறிவிக்கிறோம்.

பெயர்:.....

கதவு எண், தெருப்பெயர்:.....

முகவரி:.....

.....

நகரம், அஞ்சலகம்:.....

அஞ்சல் குறியீட்டு எண்:.....

தொலைபேசி:.....அலைபேசி.....

கடந்த மாத பத்திரிகையில் அடியேன் எழுதியிருந்தபடி, ஆகஸ்ட் *18*-ம் தியதி மாலை இங்கிருந்து புறப்பட்டு, *19*-ம் தியதி காலை சென்னை வந்து சேர்ந்தோம். அன்று பகல் உப வாச ஜெபத்தை நடத்த ஆண்டவர் இரக்கம் பாராட்டினார்.

அன்றைக்கு இரவு முதல், அழைப்பின் எதிரொலி தேவ சபையில் தங்கியிருந்தோம். ஞாயிறு காலை *7.00* மணி ஆராதனையிலும், தொடர்ந்து *10.00* மணி ஆராதனையிலும் தேவனுடைய வசனத்தைப் பிரசங்கிக்க ஆவியானவர் அடி யேனை பெலப்படுத்தினார். குறிப்பாக முதல் ஆராதனையில் அடியேன் மேடையில் நின்றாலும், வேறொருவர் பேசுவது போலவும், வேறொருவர் குரல் போலவும் அடிமை உணர்ந் தேன் மாற்கு *13:11*b. தேவன் ஒருவரே மகிமைக்கும், கனத்துக் கும் பாத்திரராயிருக்கிறார் வெளி.*4:11*.

இடைவேளை இல்லாமல் பிரயாணம் பண்ணி **மேடவாக்கம்** என்ற இடத்திலுள்ள அழைப்பின் எதிரொலி பள்ளி வளாகத் தில் புதிதாய் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் முதல் தளத்தில், புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஆராதனையிலும் தேவ வசனத்தை பிரசங்கித்தேன். அங்கிருந்து தலைமை சபைக்கு வரும்போது மாலை ஆராதனைக்குரிய செய்தி வேளையா யிருந்தது. உடனே தேவனுடைய வசனத்தைப் பிரசங்கித்தேன். இவ்விதமாக ஞாயிறு இடைவெளி இல்லாமல் போனது.

I. நீங்கள் தேவனுடைய பாதப்படியில் அமர்ந்திருக்கிறீர்களா? லூக்கா 10:39

Are you sitting before the LORD?

II. நீங்கள் தேவனோடு நடக்கிறீர்களா? ஆதி 5:24; 6:9

Are you walking with the LORD?

And Enock walked with God;. . . and Noah walked with God

III. நீங்கள் தேவனுக்கு முன்பாக நிற்கிறீர்களா? 1இராஜா.17:1; ஆதி.18:22.

Are you standing before the LORD?

(7-ம் பக்கம் பார்க்க)

வருட சந்தா ரூ.100.00

சந்தா, காணிக்கை, கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு, நாகர்கோவில்-629 001.
VARUKAYIN THOOTHAN
Newport Street, Nagercoil-629 001.
Mobile: 95432 21008

வங்கி கணக்கு எண்
VARUKAYIN THOOTHAN
A/c. No.:431521036
Indian Bank,
W.C.C. Road, Nagercoil-1
IFS Code : IDIB000N006

வங்கி வழியாக பணம் அனுப்பினால், தொலைபேசி, ஈமெயில், SMS வழியாக உடனே எங்களுக்கு தெரிவியுங்கள்.
email :
varukayinthoothan@hotmail.com

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நான் புலம்பலோடும், வேதனையோடும் குழப்பத்தோடும் இருந்த படியால் வார்த்தைகளால் தேவனுக்கு முன்பாக என் காரியத்தை வைக்க முடியாமல் கண்ணீர் வடித்து புலம்பினேன். ரோமர்8:26-ன்படி ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு எனக்காக வேண்டுதல் செய்தார்.

இரவு முழுவதும் ஜெபம்

ஹெப்ரைட்ஸ் தீவுகளில் சிலர் இந்த வேதனையை உடையவர்களாயிருந்தனர். மக்கள் இரவு முழுவதும் ஜெபத்திற்காக கூடி வந்தனர். அது சாதாரண ஜெபக் கூட்டமல்ல. அக் கூட்டங்களின் தலைவர்கள் தாங்கள் சாதாரண இயற்கையான சூழல்களை விட்டு இயற்கைக்கு மேலான நிலைகளுக்குச் சென்றதாகக் குறிப்பிட்டனர்.

ஒரு முறை அவர்கள் ஆராதித்துக் கொண்டிருந்த போது செய்தியாளர் இடையிலே நிறுத்தி விட்டு, டொனால்டு என்ற ஒரு சிறுவனை ஜெபத்தை நடத்தும்படி கூறினார். அவன் நின்று கொண்டிருக்க, ஐந்து நிமிடம் கூட அவன் ஜெபிக்கவில்லை. அதற்குள்ளாக தேவ ஆவியானவர் சபையில் அசைவாடினார்.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் ஆலயத்தில் இவ்வாறு நடந்து கொண்டிருக்கும்போது மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்களும், நெசவு வேலையில் ஈடுபட்டிருந்தவர்களும், பிற வேலையில் ஈடுபட்டிருந்தவர்களும், வியாபாரிகளும், பள்ளி ஆசிரியர்களும் தேவ ஆவியால் பிடிக்கப்பட்டு 10 மணிக்கு ரஸ்தா எங்கும் மக்கள் தேவனைத் தேடி வந்தனர். நான் ஒரு பாதை வழியாகச் செல்லும் போது மூன்று மனிதர் முகங்குப்புற விழுந்து கிடந்தனர். மனக்குழப்பத்தால் அவர்கள் என்னிடம் பேசவில்லை. அவர்கள் கூட்டத்தில் பங்கு பெற்றதுமில்லை. ஆனாலும் எழுப்புதலால் ஏற்பட்ட தாக்கம் இது.

ஒரு வருட ஜெப போராட்டம்

வியாகுலத்தோடு போராடுவது என்பது படுக்கைக்குச் செல்லுமுன்பு இரு நிமிடங்கள் ஜெபிப்பதும், பயணம் செல்வதற்கு முன்பாக விரைவாக ஜெபிப்பது போன்றதும் அல்ல. பதில் வருவதற்கு முன்பாக முழு இரவிலும், வருடம் முழுவதும் ஒரு வாரத்தில் நான்கு இரவுகள் பாரத்தோடு போராடி ஜெபிப்பதாகும்.

பலிபீடத்தின் கொம்புகளை விடாமல் பிடித்துக் கொள்ளுமட்டும் தொடர்ந்து தேவனுக்கு முன்பாக விழுந்து போராடி ஜெபிக்க வேண்டும். இதில் வேண்டுதல், கெஞ்சுதல், விவாதித்தல், வேதனை, வியர்வை, விடாமுயற்சி, தொடர்ந்து தேடுதல், கேட்டல், தட்டுதல் யாவும் அடங்கும். வானத்திலிருந்து வல்லமை விழும் வரை இந்த நிலை நீடிக்க வேண்டும். இழந்து போன பிள்ளைகளுக்காகத் தாய் தந்தையர் இவ்வாறு ஜெபிக்கிறார்களா?

ஆத்துமாக்களுக்கான வியாகுலம் நம்மில் இல்லை என்பதை நாம் அறிக்கையிடும்போது கிறிஸ்துவுக்காக நாம் பயன்படுத்தப்படுவோம். ஆனால் கிறிஸ்துவற்ற நித்தியத்திற்கு நேராக மக்கள் செல்லும்போது நாம் அதைப் பொருட்படுத்துவதில்லை. அதற்காக அழுது போராடவும், கெஞ்சவும், ஜெபிக்கவும் சக்தியற்றுப் போனோம். கிறிஸ்துவற்ற மக்கள் தங்கள் நிலையைக் குறித்த பாவ உணர்வு அற்றவர்களாயிருக்கிறார்கள். நாமும் அவர்களது நித்திய அழிவினைக் குறித்த பயங்கரத்தை ஆழமாக உணரவில்லை.

மாநாடுகளும், மனித முயற்சிகளும் எழுப்புதலைக் கொண்டு வர இயலாது

நாம் ஏராளமான சுவிசேஷ கூடுகைகள், மாநாடுகள் போன்ற எழுப்புதல் கூட்டங்களை நடத்துவது உண்மைதான். இவை எல்லாம் வந்து போனாலும் பட்டணங்களும், நகரங்களும், கிராமங்களும் முன்பு போலவே காணப்படுகின்றன. ஆத்தும அறுவடையில் நாம் உத்தியோகஸ்தர்களாகவும், இயந்திர மயமாகவும், குளிர்ந்த நிலையிலும் செயல்படுகிறோம். நாம் ஆதாயப்படுத்த விரும்பும் ஆத்துமாக்களில் அனலோ, பாரமோ, வேதனையோ, விழிப்புணர்வோ மற்றும் கண்ணீரோ தங்கள் நிலையைக் குறித்து ஏற்படவில்லை. அவர்கள் வழிகளில் காணப்படும் தவறுகளை எச்சரிக்கும் எந்த உணர்வையும் அவர்கள் பெறவில்லை. நமது சாட்சியற்றதும் சிரத்தையற்றதுமான வாழ்வு அவர்கள் தேவனற்ற பாதையில் நடக்க ஏதுவாகிறது.

நாம் நடத்தும் மாநாடுகள், எழுப்புதலின் முயற்சிகள், மக்கள், பொருள் ஆகியவற்றைத் திரட்டுதல் போன்ற எந்திரமயமான சுவிசேஷ முயற்சிகளால் நாம் திருப்தியடைவதைக் கண்டு தேவன் பரிதாபம் கொள்கிறார். பாரமின்றி முயற்சி செய்வதும் முற்றுகையிடாமல் கைப் பற்றுவதும் நமக்கு பயனளிப்பதில்லை.

புலம்பி அழுது உபவாசித்து மன்றாடுவதற்குப் பதிலாக உண்டு, குடித்து, வேடிக்கையாய் வாழ்ந்து விட்டு ஏன் மக்கள் இரட்சிப்படையவில்லை என்று கேட்கிறோம். ஆழமான தாழ்மையும், மேல் வீட்டறை ஜெபமுமே தேவன் இறங்கி வர வழியை ஆயத்தம் செய்யும்.

மன்றாட்டும், வியாகுலமும், அழுகையும் பலிபீடத்திற்கும் தேவாலயத்திற்கும் இடையில் இல்லாத காரணம் தேவ ஜனங்கள் இந்த நாட்களின் நிலையைக் குறித்து விழிப்புணர்வு அடையவில்லை. சபை வளர்ந்து வருகிறது, ஆவிக்குரிய முன்னேற்றம் அதிகரிக்கிறது என அனேகர் நிரூபிக்கின்றனர். ஆனால் சபை மக்களின் எண்ணிக்கை அதிகரித்தும் சன்மார்க்க நெறி மிகவும் தரம் தாழ்ந்து விட்டது என்பதுதான் உண்மை.

"விழிப்புணர்வை ஏற்படுத்துவது யார்? அழுது புலம்பும் மன்றாட்டு வீரர் எங்கே?"

சபையில் வந்து சேருகிறவர்களிடம் தாழ்மை, மனந்திரும்புதல் ஆகியவற்றின் அறிகுறியே காணப்படவில்லை! அழுது கண்ணீர் வடிக்கும் மன்றாட்டு வீரர்கள் எங்கே? யார் விழிப்படைந்தார்கள்?

தான் விரும்பிப் பார்க்கும் T.V. நிகழ்வைப் பார்க்க இரவு ஆராதனையை முடித்து விட்டு விரைவாக வீட்டிற்கு வரும் ஒரு ஊழியக்காரன், பிறருக்காக பாரம் கொள்ள முடியுமா? முந்திய இரவு நடைபெற்ற கேளிக்கைகளைக் குறித்த கரிசனையுடன் கர்த்தருடைய நாள் காலையில் பேசிக்கொள்ளும் தேவ பிள்ளைகள் அந்த நாளுக்காக ஆயத்தம் செய்திருப்பார்களா?

"தேனீர் பருகும் ஐக்கியம் ஜெப ஐக்கியத்தைவிட மேலாகி விட்டது. மனந்திரும்புதலும், ஆதி அன்பைத் தொடர்ந்த செயல்களும் விருந்துகளாலும், களியாட்டுகளாலும் மறைக்கப் பட்டு விட்டன".

நண்பர்களே, இது வேடிக்கை, விளையாட்டு, நேரப்போக்கு ஆகியவற்றிற்கான நேரமல்ல. வேதனையோடும், கண்ணீரோடும், புலம்பலோடும் மன்றாடி ஜெபிக்க வேண்டிய காலம். தேவாலயத்திற்கும் பலிபீடத்திற்கும் இடையில் நின்று ஜெபிப்போம். ஜனத்தைக் கூட்டி தேவனுக்கு முன்பாக உபவாசித்து ஜெபிப்போம். 'உமது ஜனங்களை இரட்சியும் ஆண்டவரே' என்று முழங்காலில் நின்று நம்மை ஜெபிக்க அவசரப்படுத்தும் சமயமாக இது இருக்க வேண்டும்.

இழந்து போன ஆத்தும பாரத்தை மறுபடியும் பெற்றுக் கொள்வது கடினமானது. ஆத்தும ஆதாய உழைப்பில் பவுல் ஈடுபட அவர் புகழ், நண்பர்கள், ஐசுவரியம், இளைப் பாறுதல், பேர்பிரஸ்தாபம், உறவினர் யாவரையும் விட்டு விட வேண்டியதாயிருந்தது. பிரிவுகள், அழுகைகள், தழும்புகள், தாழ்ச்சிகள் போன்றவற்றை பிறர் கிறிஸ்துவைக் கண்டு கொள்ள அவர் ஏற்றுக் கொண்டார். எல்லாத் தங்கு தடைகளையும் தாண்டி அவரில் காணப்பட்ட ஆத்தும பாரம் கொழுந்து விட்டு நிலையாக எரிந்தது. இந்த விதமான பாரத்தை நாமும் பகிர்ந்து கொள்ள லாமா? இதனை சிலுவையின் அடிவாரத்தில் பெறலாம். வறண்ட கண்களோடும், குளிர்ந்த இருதயத்தோடும் கிறிஸ்துவுக்காக சாட்சியாக வாழ முடியாது. ஏனெனில் இயேசு பாவிகளை இரட்சித்து நரக வாழ்விலிருந்து அவர்களைத் தப்புவிக்க சிலுவையில் சிந்திய தமது இரத்தத்தின் கருத்தை நாம் புரிந்து கொள்வது அவசியம்.

இருவாரங்கள் நரகக்கில் என்ன செய்வது?

லண்டன் மாநகரின் கிழக்கு ஓரத்தில் வில்லியம் பூத் இரட்சண்ய சேனை என்ற அமைப்பை ஸ்தாபித்த போது அவரோடு ஒரு சில அர்ப்பண முள்ள வாலிபர்கள் மட்டுமே அவரது காட்சியை உடையவராயிருந்தார்கள். நாட்கள் சென்றபோது ஆத்தும ஆதாயப் பயிற்சிக்காக இளைஞர்களுக்குப்

பள்ளியை ஆரம்பித்தார். ஒரு நாள் சுவி சேஷ பணியைக் குறித்து அவர்களுக்கு விரிவுரை ஆற்றிக் கொண்டிருந்த போது இடையிலே நிறுத்தி விட்டு வேடிக்கை யாக, 'நான் உங்கள் அனைவரையும் இரு வார காலம் நரகத்திற்கு அனுப்ப விரும்புகிறேன்' என்றார். இந்த இளை ஞர்கள் சில நாட்கள் நரகத்தில் கொடிய வேதனைப்படும் மக்களைப் பார்த்து விட்டு வந்தால் அவர்களில் ஆத்தும பாரம் ஏற்பட்டு, வரப்போகும் கோபத் திற்குத் தப்பியோட மக்களை அவர்கள் எச்சரிக்க ஏதுவாகும் என்பது அவரது கருத்து.

"தேவனே, நாங்கள் வாழும் ஒவ்வொரு குறுகிய வினாடியும் பரத் திற்கோ அல்லது நரக வேதனைக்கோ சென்று கொண்டிருக்கும் எண்ணற்ற ஆத்துமாக்களை எண்ணிப் பார்க்க உதவி செய்யும். என்னை எழுப்பி, புது பெலன் தாரும். நான் உமது வழியாக தேடி ஆதாயப்படுத்த விரும்பும் ஒருவரே னும் மரணத்தை வெட்கத்திலும், பாவத் திலும் கடந்து செல்ல வேண்டாம்".

இரட்சிப்பதற்குக் கர்த்தருடைய இருதயமும் வல்லமையும்

The Lord's heart and power to save

Rich Carmicheal

எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

சுவிசேஷ பணியைக் குறித்த ஒரு முக்கிய சத்தியம், அனைத்து மக்க ளும் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள கர்த்தர் விரும்புகிறார் என்பதே. "நம்மு டைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக, அது நன்மையும் பிரியமுமா யிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக் கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவரா யிருக்கிறார் 1தீமோ.2:3-4. ". . . . ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லா ரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமை யுள்ளவராயிருக்கிறார்" 2பேது.3:9.

மூன்றரை ஆண்டுகள் இவ்வுல கில் வாழ்ந்த இயேசுக்கிறிஸ்து தம்மாலி யன்ற மட்டும் இரட்சிப்பை மக்களோடு பகிர்ந்து கொள்ளத் தமது போதனை களாலும் செயல்களாலும் தெளிவுபடுத் தினார். இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே அவர் இவ்வுலகில் வந்தார் லூக்.19:10. தமது ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் மத்.20:28. இந்த நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ள கிராமம், கிராமமாகவும், பட்டணங்கள் தோறும் அவர் பிரயாணம் செய்தார் மாற்.1:38. ஒரு பாவி மனந்திரும்பும் போது பரலோகத்தில் மிகுந்த சந்தோஷ முண்டாகும் என்று அவர் கூறினார் லூக்.15:7. தேவனுடைய அன்பு மன்னிப்பு ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்ள 'பாவிகளோடு' அதிக நேரத்தை செலவு செய்தார். அவரது ஊழிய காலத்தின் இறுதியில் 'உலகமெங்கும் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கும்படி' அவர் களுக்குக் கட்டளையிட்டார் மத்.28: 19-20.

கர்த்தர் அனைத்து மக்களின் இரட்சிப்பையும் விரும்புகிறார் என்பது தெளிவாகிறது. நமது குடும்பத்தின் ஒவ்வொரு நபரும், நண்பர்களும், அயலகத்தாரும், நம்மோடு பணி செய்கிறவர்களும், நமது பட்டணவாசி களும், நமது தேசத்தாரும், உலகிலுள்ள அனைவரும் இரட்சிக்கப்படுவதை அவர் விரும்புகிறார். யாருமே கெட்டுப் போவது அவரது விருப்பமல்ல.

கூடாதவைகளை ஆண்டவரால் செய்ய முடியும்

ஐசுவரியவானான வாலிபனை சந்தித்த பின்பு, இயேசு தமது சீஷர்களி ¦ D "ஐசுவரியவான்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிது" என்றார். அப்போது சீஷர்கள், அப்படி யானால் யார் இரட்சிக்கப்படக் கூடும்? என கேள்வி எழுப்பினர். பதிலாக இயேசு "மனுஷரால் இது கூடாதது தான்; தேவனாலே எல்லாம் கூடும் என்றார்" மத்.19:25-26. இரட்சிப்பைப் பொறுத்த மட்டில் சுவிசேஷ பணியில் இரண்டாவது முக்கிய சத்தியம் தேவனால் எல்லாம் கூடும் என்பதே.

ஒருவரது மனந்திரும்புதல், இரட்சிப்பு ஆகியவற்றைக் குறித்து நீங்கள் நம்பிக்கை இழந்திருக்கலாம். ஆனால் தேவனால் எல்லாம் கூடும் என்பதை மறக்க வேண்டாம். வேத புத்தகத்தில் கூறப்பட்டிருக்கும் நிக்கொ தேமு என்ற பரிசேயன், உண்மையற்ற ஆயக்காரன் சகேயும், சபையை துன்பப் படுத்தின சவுலும், சமாரியாவில் வாழ்ந்த பாவியான பெண், அரிமத்தியா ஊரா னாகிய ஐசுவரியவான் யோசேப்பு, வியாபாரம் செய்த லீதியாள், இயேசு வோடு சிலுவையிலறையப்பட்ட ஒரு கள்ளன், தெசலோனிக்கேயாவில் விக்கிரகங்களை வணங்கிய மக்கள் (1தெச.1:9) மாயவித்தைக்காரர் (அப்.19: 19) பிலிப்பி சிறைச்சாலைத் தலைவன் (அப்.16:27-34) போன்ற அனைவரும் இதற்கு உதாரணங்களாவர்.

மக்களை இரட்சிக்கும் தேவனு டைய திறமையால் பிறரை அவரண்டை வழிநடத்த விரும்பும் நமக்கு நம்பிக்கை உண்டு. அகிரிப்பா ராஜாவை சந்தித்த அப்.பவுலைப் போல எல்லா எதிரிடை கள் மத்தியிலும் அவரை நம்பலாம். இவ்வளவு குறைந்த சமயத்தில் தன்னை கிறிஸ்தவனாக்க சம்மதிக்கப் பண்ண முடியுமா என்று அகிரிப்பா கேட்ட கேள்விக்கு பதிலாக பவுல், "நீர் மாத்திர மல்ல இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும். . . . முழுவதும் என்னைக் போலாகும்படி தேவனை வேண்டிக் கொள்கிறேன்" என்றார் அப்.26:28-29.

ஜெபம் மிகவும் இன்றியமையாதது

சுவிசேஷ பணிக்கு ஜெபம் மிகவும் இன்றியமையாதது. எடுத்துக் காட்டாக, இயேசு சீஷர்களைப் பார்த்து, ". . . .அறுப்புக்கு எஜமான் தனது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள் என்றார்" மத்.9:38 என்று உற்சாகப்படுத்தினார். அப்.பவுல் தெசலோனிக்கேயருக்கு ". . . . உங்களிடத்தில் கர்த்தருடைய வசனம் பரம்பி மகிமைப்படுகிறதுபோல எவ்வி டத்திலும் பரம்பி மகிமைப்படும் படிக்கு . . . .எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்" 2தெச.3:1-2 என்று எழுதுகிறார். கொலோசேயரிடம் ". . . அந்த இரகசியத்தை குறித்துப் பேச வேண்டிய பிரகாரமாய்ப் பேசி அதை வெளிப்படுத்துவதற்கு, திருவசனம் செல்லும்படியான வாசலை தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள்" (கொலோ.4: 3-4) என்று கேட்கிறார். "நான் பிரதான மாய்ச் சொல்லுகிற புத்தியென்ன வெனில், எல்லா மனுஷருக்காகவும், விண்ணப்பங்களையும், ஜெபங்களை யும், வேண்டுதல்களையும், ஸ்தோத் திரங்களையும் பண்ண வேண்டும். . . . ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனுஷ ரும் இரட்சிக்கப்படவும்.... அவர் சித்த முள்ளவராயிருக்கிறார்" 1தீமோ.2: 1-4.

கர்த்தர் மாத்திரமே ஒருவரு டைய இருதயத்தைத் திறக்க முடியும். எனவே நாம் சுவிசேஷத்தை அறிவிக் கும் நபர்களில் தொடர்ந்து அவர் கிரியை செய்யும்படியாக கேட்க வேண்டும். இயேசு தமது சீஷரிடம் யோவா.6:44-ல் "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்" என்று கூறியிருக்கிறார். இழந்து போனவர் களில் தேவ ஆவியானவர் வல்லமையாக வும் ஆழமாகவும் கிரியை செய்யும்படி நாம் ஜெபிக்க வேண்டும்.

நாம் பிறருடைய இரட்சிப் புக்காக ஜெபிக்கும் போது மிகவும் உறுதியுடனும் எதிர்பார்ப்புடனுமிருக்க இரண்டு காரணங்களாவது இருக்கலாம். முதலாவது இத்தகைய ஜெபங்கள் கர்த்தருடைய சித்தத்தின்படியிருக் கிறது. இரண்டாவதாக தேவனால் எல்லாம் கூடும் என்று நாம் அறிவோம். அவர் இரட்சிப்பை ஒருவர் மேல் திணிக்காவிட்டாலும் நாம் உறுதியுடன் அவரது ஆவி, யாருக்காக நாம் உத்தமமாக ஜெபிக்கிறோமோ அவர்களில் ஆழமாகக் கிரியை செய்ய எதிர்பார்க்க முடியும்.

ஆண்டவர் நமது வாழ்வின் மூலம் கிரியை செய்கிறார்

நம்மூலமாக பிறர் தேவ னண்டை வழிநடத்தப்படக் கிரியை செய்ய முடியும் என்பதை வேதவசனம்

தெளிவுபடுத்துகிறது. தீத்து2:9-10 வசனங்களின்படி, ". . . .இரட்சகராகிய தேவனுடைய உபதேசத்தை எல்லா வற்றிலும் அலங்கரிக்கத்தக்கதாக . . . ." அவிசுவாசியான ஒரு கணவன் மனைவி யின் கற்புள்ள நடக்கையைப் பார்த்து போதனையின்றி, மனைவிகளின் நடக் கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவான் 1பேது.3:1-2.

"விசுவாசம் கேள்வியினாலே வரும்" ரோமர்10:17. எனவே நமது வார்த்தைகள் மூலம் சுவிசேஷத்தை நாம் பகிர்ந்து கொள்ளும் போது ஆண்டவர் நமது செய்திகள் மூலம் கிறிஸ்துவற்றவர்களிலும் கிரியை செய்வார். நமது வார்த்தைகள் கிருபை பொருந்தியவைகளாகவும், உப்பினால் சாரமேற்றப்பட்டவைகளாகவும் எப்படி பதிலளிக்கவேண்டுமென்ற அறிவுள்ளவைகளாகவும் இருக்க வேண்டும் கொலோ.4:6. நம்மிடம் எதிர்த்து நிற்பவர்களுக்கு தாழ்மை யோடும், பயபக்தியோடும் பதிலளிக்க எப்போதும் ஆயத்தமாயிருக்க வேண்டும் 1பேதுரு 3:15. நாம் கிருபையோடும், உத்தமத்தோடும், மன உருக்கத்தோடும், ஞானத்தோடும், சாந்தத்தோடும், தேவ பயத்தோடும் அவரது செய்தியைப் பகிர்ந்து கொள்ளும் போது ஆண்டவர் நம்மூலமாகக் கிரியை செய்வார்.

ஆண்டவரோடு பணி செய்தல்

". . . . இதோ இப்பொழுதே அனுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சண்ய நாள் 2கொரி.6:2. உங்கள் வாழ்வு, ஜெபம், இவற்றின் மூலம் தேவன் பிறரை இரட்சிப்புக்குள் கொண்டு வர ஆவலாயிருக்கிறார். அவரது ஒத்தாசையுடன் எல்லாமே கூடும்.

வேத அடிப்படையிலான பாவத்தைக் குறித்த கருத்து, இழந்து போனவர்களைக் குறித்த பாரத்தை ஆழப்படுத்தும். வேதத்தின்படி இழந்து போதல், பாவி பாவத்தில் மரிப்பது, சாத்தானுக்கு அடிமைப்படுவது, பரிசுத்த தேவனால் நியாயந்தீர்க்கப்படுவது போன்றவற்றை நாம் புரிந்து கொண் டால் ஒரு மேய்ப்பனின் இதயத்தை ஈவாகப் பெற ஆயத்தப்படுவோம். அது வல்லமையான இரக்கமுடையதா யிருப்பதால் மந்தையை விட்டு விலகிச் சென்ற ஆட்டை தேடி வரச் செய்யும்.

இந்த பாரத்திற்கு, தேவனு டைய மன்னிப்பின் கிருபை அவசரத்தை அளிக்கிறது என்பதை வசனம் அறிவிக் கிறது. கிறிஸ்து பாவிகளை இரட்சிக்க உலகில் வந்தார் என்பது நற்செய்தி. அவரது இரட்சிப்பு நம்மைப் பாவத்தி லிருந்து விடுவிக்கிறது. கிருபையால் நாம் மன்னிக்கப்பட்டு, தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டோம். கிறிஸ்து திரும்ப வரும்போது நாம் புதிய சரீரங் களைப் பெற்று புதிய உலகத்தில் வைக்கப்படுவோம். அங்கு பாவமில்லை. தேவனுக்கே மகிமை.

இந்த விடுதலையின் செய்தி முதல் நூற்றாண்டிலே உற்சாகத்து டனும், வல்லமையுடனும் உலகுக்கு அளிக்கப்பட்டது. விசுவாசிகள் இதனை பாவ உணர்வோடும் அவசரத்தோடும் அறிவித்தார்கள். அந்தப் பெரிய இரட் சிப்பின் மகிமையைக் குறித்த உணர்வு அவர்களில் இருந்தது. அக்கினிப் பொறி யாக சுவிசேஷத்தை அறிவிக்க நமது பாவத்தின் கொடூரம் நம்மால் உணரப் பட வேண்டும். அதோடு நமது தேவனின் மகத்துவத்தில் நாம் களிகூர வேண்டும்.

கண்ணீர்களின்றி எத்தனை தூரம் நாம் செல்லத் துணிவோம்?

How long dare we go on without tears?

J.Allen Thompson

ஒருநாள் அதிகாலையில் A.B. சிம்சன் தனது தியான வேளையில் ஈடுபட்டிருந்தார். அவரது கரங்கள் உலக கோளத்தைப் பற்றியிருந்தன. அவரது கண்களிலிருந்து கண்ணீர் சொரிந்தது. இழந்து போன உலகத்திற் காக அவர் ஜெபித்துக் கொண்டிருந்தார்.

கிறிஸ்துவற்ற குற்றத்திலும், அந்தகாரத்திலும்
நூறு ஆயிரமென ஆத்துமாக்கள் தினமும்
ஒவ்வொன்றாய் தூரமாய்க் கடந்து செல்கின்றனர்

கொடிய நியாயத் தீர்ப்பு நாளில்
அவர்களது அழிவுக்கு நீ தான் காரணம் என்று
உன்னைக் குற்றப்படுத்தும்போது
கிறிஸ்துவின் சபையே, நீ என்ன சொல்லுவாய்?

'பாரம்' என்பது உள்ளான ஆவிக் குரிய தூண்டுதல். இது பயனுள்ள சுவிசேஷ பணிக்கு இன்றியமையாதது. இரட்சிக்கப்படாதவர்களுக்கு நேரான உணர்வும், இருதய நொறுங்குதலு மாகும். அவர்களது குணப்படாத நிலைக்காக மனம் உடைந்து காணப் படும் நிலையாகும்.

1865-ல் இங்கிலாந்திலுள்ள பிறைட்டன் சபையாரின் சுய திருப்தி நிறைந்த ஞானப்பாடல்களின் பாடலால் கோபமடைந்தவர் ஹட்சன் டெய்லர். அவர் சீனாவைக் குறித்த பாரம் நிறைந்த வராயிருந்தார். கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்பட்ட இரக்கமற்ற தன்மையை அவரால் பொறுக்க முடியவில்லை. அவரது வாழ்க்கை சரித்திரத்தை எழுதிய ஜான் பொல்லாக் இப்படி எழுதுகிறார்: "டெய்லர் சுற்றிலும் பார்த்தார், விலையு யர்ந்த ஆடை ஆபரணங்களுடனும், அலங்கரிப்புகளுடனும், ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் காணப் பட்டனர். அவரால் அதனை கிரகிக்க முடியவில்லை. பரிசுத்தமற்ற சூழல் அவரை வருத்தியது. தொப்பியைப் பிடித்துக் கொண்டு வெளியேறினார். ஆயிரத்திற்கும் அதிகமானோர் தங்கள் பாதுகாவலை எண்ணி மகிழ்ந்து கொண் டிருக்கும் போது கோடிக்கணக்கானோர் அறிவின்மையால் மாண்டு கொண்டிருக் கின்றனர். அதிகமான ஆவிக்குரிய வியா குலத்துடன் தனியாக மணற்பரப்பில் அலைந்தேன்". டெய்லர் கடற்கரையில் "விருப்பமுள்ள 24 திறமையுள்ள வேலை யாட்களுக்காக" ஜெபித்தார். சீனாவி லுள்ள இழந்து போன மக்களுக்காகத் தன்னோடு பாரம் சுமக்க இவர்களைத் தேடினார்.

இரட்சிக்கப்படாதவர்களுக் காகக் கரிசனையுடைய கிறிஸ்தவ பணியாளர்கள் மிகக் குறைவு. ஜெபக் கூடுகையில் சரீர, பொருளாதார தேவை களுக்காக ஜெபிக்கிறார்கள். இரட்சிக் கப்படாதவர்கள் மறக்கப்பட்டு விட் டார்கள். கிறிஸ்துவற்றவர்களைக் குறித்த கரிசனை யாருக்குமில்லை. மிஷ னெரிக் கூடுகைகள், வேதகலாசாலை கள், சபைகள் ஆகியவற்றிலும் ஆத்துமாக் களை ஆதாயம் பண்ணும் ஆவியில்லை.

சிலவேளைகளில் தேவ ஆவியா னவர் குறிப்பிட்ட சில தேவைகளுக்காக என்னை பாரங்கொள்ளச் செய்வதுண்டு. ஆயினும் நான் பாவிகளுக்காக எரேமியா எருசலேமுக்காகப் புலம்பியது போல புலம்பியதில்லை. பவுலைப் போல வீட்டிற்குவீடு சென்று மக்களுக்காக ஜெபிக்கவில்லை. நான் ஜிம் எலியட் டோடு சேர்ந்து, "ஆண்டவரே ஊழியக் காரரையும் செய்திகளையும் தமது வல்லமையால் நிரப்பும்" என்று ஜெபிக் கிறேன்.

இந்த நிர்விசாரமான போக்கு பாரமற்ற கிறிஸ்தவர்கள் நோயுற்ற மனசாட்சியால் பாதிக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ளது. அவர்கள் பாவத்தைப் பற்றியும் தேவனுடைய மன்னிக்கும் கிருபையைக் குறித்தும் அறியாமலிருக் கிறார்கள்.

அக்டோபர் மாத உபவாச ஜெபம்

Heart Cry for Holy Spirit Revival

எழுப்புதலுக்காக
இதய கதறல்–2017

(உயிர்மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : 07-10-2017
1-வது சனிக்கிழமை

சமயம் : காலை 10.00 மணி முதல்
மாலை 5.00 மணி வரை

இடம் : மாரநாதா ஜெபவீடு
மகாலிங்கபுரம், பொள்ளாச்சி

தொடர்பு : பாஸ்டர் B.சகரியா,
பொள்ளாச்சி
மொபைல் : 84286 87759

இந்த உபவாச ஜெபத்திற்காக பாரத்தோடு ஜெபிக்குமாறு உங்களை பட்சமாய் கேட்கிறோம். பொள்ளாச்சியை சுற்றிலுமுள்ள வாசகரை வாஞ்சையோடு அழைக்கிறோம்.

விபரங்களுக்கு: 94897 40295

மருத்துவ வள்ளத்திலிருந்து கொள்ளையர்களின் குகை வரை பகுதி–4

From hospital boat to Robber's den (Part - 4)

Oswald J.Smith

ஜாஃப்ரே எந்த ஒரு தருணத்தையும் விடாமல் ஒவ்வொரு நாளும் சுவிசேஷத்தை அறிவித்தார். கள்வர்கள் சுவிசேஷத்தைக் கேட்கும்படி அவரிடம் தினமும் கூடி வந்தனர். ஒரு காலத்தில் தேவனிடம் 'தூரமான எட்டாத இடங்களுக்கு' தம்மை அனுப்பும்படி அவர் ஜெபித்தார். இப்போது இயேசுவின் பெயரையே கேட்டிராத மக்களின் மத்தியிலிருந்தார். இத்தனை கடின, தாழ்ந்த ஒன்றுமற்ற மக்களை அவர் ஒருபோதும் பார்த்ததில்லை. ஆனால் அவர்கள் முகங்களில் வெட்கமோ, குற்ற உணர்வோ தெரியவில்லை.

பாஷை கற்றுக் கொள்வதில் கவனம் செலுத்திய அவர் அவர்களுடைய மொழியிலே சரளமாகப் பேச முடிந்தது. சுவிசேஷத்தின் வல்லமையை நிரூபிக்க இது ஏதுவாயிருந்தது. அவரது உத்தரவாத உணர்வு அவரை அழுத்தியதால் தேவனிடம் ஊக்கமாக ஜெபித்தார்.

'என்ன செய்தியை இவர்களுக்குச் சொல்வது?' என்று அவர் ஜெபித்தார். 'இதுதான் ஒருவேளை இவர்கள் சுவிசேஷத்தைக் கேட்கும் ஒரே சந்தர்ப்பமாக இருக்கலாம். தேவனே, எனக்கு வழிகாட்டும், நான் அவர்களுக்கு என்ன சொல்வது?'

கல்வாரியின் சம்பவம் ஒன்றே இந்த வேளைக்கு ஏற்றதாகத் தென்பட்டது. 'தேவ அன்பும் கிறிஸ்துவின் மரணமும்', சுவிசேஷம் அவர்களை பாவத்திலிருந்து இரட்சிக்கக் கூடியது. அவர் பேசிய போது அவர்களில் அசைவு ஏற்பட்டது. கடின இருதயமுள்ளவர்களாயிருந்தும் தங்கள் உணர்வை அவர்களால் மறைக்க முடியவில்லை. திடீரென அந்த இடத்தை விட்டு நகர்ந்தாலும் மறுபடியும் சில வினாடிகளில் திரும்ப வருவார்கள். இப்படி ஒரு செய்தியை அவர்கள் இதுவரை கேட்டதில்லை.

கொள்ளையர் தலைவனும் உணர்ச்சிவசப்பட்டான். அடிக்கடி மிஷனெரி அவனோடு பேச வாய்ப்பு கிடைத்தது. அவனது கேள்விகளுக்கெல்லாம் அவர் பதிலளித்தார். அவன் 35 வயது நிரம்பியவன். ஆயினும் திறமையும் புத்தி கூர்மையுள்ளவனுமாயிருந்தான். மிஷனெரி மிக மரியாதையோடு அவனிடம் பேசுவது போலவே அவனும் மரியாதையுடன் பேசினான். அவன் கல்வியறிவற்றவன். எழுதவோ வாசிக்கவோ அறியாதவன்; ஆனால் அவனது பேச்சில் கலாச்சாரமும், பண்பு மிருந்தது.கூளந்த சீன உயர்குல மனிதனையும் விட மிஷனெரியுடன் அழகிய மொழியில் பேசுவான்.

சில நாட்களுக்குப் பின் இத் தலைவன் ஜாஃப்ரேயிடம் வந்து, "இன்று இரவு எங்களுக்குப் பிரசங்கிக்க முடியுமா?" என்று கேட்டான். தான் முகாமிலுள்ள அனைவரையும் கூட்டிச் சேர்ப்பதாகவும் கூறினான். ஜாஃப்ரே மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்.

அப்படியே இரவில் ஆண்களும், பெண்களும், வயோதிபரும், வாலிபரும் கூடி வந்தனர். சிலர் திருடச் சென்றிருந்தனர். வந்த சுமார் 150பேரும் மிஷனெரியைச் சுற்றி உட்கார்ந்தனர். தேவனற்ற இந்தக் கூட்டத்தைப் பார்த்த ஜாஃப்ரே தனக்காக ஜெபிக்கும்படி உடன் மிஷனெரிகளுடன் கேட்டுக் கொண்டார். தான் ஒரு சர்ப்பத்தைப் போல வினாவுள்ளவராயிருந்தால் மட்டுமே அவர்களுக்குப் பாத்திரமாயிருக்க முடியும் என்று உணர்ந்து பேச ஆரம்பித்தார்.

"மிஷனெரிகளாகிய நாங்கள் துரதிருஷ்டத்தில் அகப்பட்டுக் கொண்டோம் என்று நீங்கள் எண்ணலாம். ஆனால் நாங்கள் அப்படி எண்ணவில்லை என்று சொல்ல விரும்புகிறேன். எங்கள் கைது ஒரு ஒப்பற்ற வாய்ப்பு. நல்ல செய்தியை அறிவிக்கும்படி தேவன் எங்களை அனுப்பினாரென்று நாங்கள் விசுவாசிக்கிறோம். இல்லாவிட்டால் இரட்சிப்பின் நற்செய்தியை நீங்கள் கேட்டிருக்கவே முடியாது. எனவே நாங்கள் இங்கிருப்பதற்காக தேவனைத் துதிக்கிறோம்".

"இப்போது முதலாவது ஒரு காரியத்தைக் குறித்து உங்களை எச்சரிக்க விரும்புகிறேன். இது உங்கள் நன்மைக்கேதுவானது. உங்களில் அனேகர் எங்கள் ஆடைகளை அணிந்திருக்கிறீர்கள். அயல் நாட்டுப் பால்புட்டிகளும், தொப்பிகளும் உங்களிடமிருக்கிறது. இந்த மலையில் வழிவிலகிச் செல்வது எளிது. ஒரு இருட்டான வேளையில் இவ்வாறு நீங்கள் வழி தவறி விட்டால் வீரர்கள் உங்களிடம் அயல் நாட்டுப் பொருட்களிருப்பதைக் கண்டு பிடித்தால் உங்களைத் திருடர் எனக் கண்டு பிடித்து விடுவார்கள். உடனே உங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும். எங்கள் பொருட்கள் உங்களிடமிருப்பது எங்களுக்கு வருத்தமல்ல. ஆனால் உங்களுக்கு ஆபத்து இருக்கிறது. நாங்கள் உங்களைக் குறித்து பராது சொல்லி சிக்கலில் மாட்டவே மாட்டோம். நாங்கள் உங்கள் அழிவை விரும்பாமல் உங்கள் ஆத்தும இரட்சிப்பையே விரும்புகிறோம். தலைவரே நான் கூறுவது சரிதானே" என்று பேசினார் ஜாஃப்ரே.

ஒருபுறமாக அமைதியாக நின்று கொண்டிருந்த தலைவன் ஆம் என்று ஆமோதித்தான். 'உங்கள் பாதுகாவலுக்காக இதை உடனே செய்யுங்கள்' என்று அவர் வலியுறுத்தினார்.

அனைத்து திருடர்களும் சம்மதிப்பதாகத் தலை அசைத்தனர். அவர்கள் அவர் பேசுவதை ஆவலுடன் கவனிக்க ஆரம்பித்தனர். ஜாஃப்ரேயின் உத்தமத்தை அவர்கள் புரிந்து கொண்டனர்.

அரைமணி நேரத்தில் ஜாஃப்ரே கிறிஸ்துவைக் கண்டு கொள்வது எப்படி என போதித்தார். அவர்கள் ஆத்துமா எப்படி இரட்சிப்படைய முடியும், அதற்கு இயேசு ஒருவரே வழி என்று கூறி தேவ குமாரனாகிய கிறிஸ்துவையும், கல்வாரியையும் உயர்த்திக் காண்பித்தார். மக்கள் இன்னும் அதிகமாக அசைக்கப்பட்டனர். தூய ஆவியானவர் செயல்பட்டார். ஜாஃப்ரே, அனேகர் தூய இரத்தத்தால் கழுவப்படுவதைப் பார்க்க முடியும் என விசுவாசித்தார்.

விடுதலை!

ஒருநாள் தலைவன் திடீரென நடு இரவில் ஒரு கடுதாசியுடன் வந்து அதில் கையொப்பமிடக் கூறினான். அதன்படி 200,000 பவுண் காசும் 100,000 பவுண்ட் பொருட்களுக்காகவும் மீட்புப் பணயமாகக் கொடுக்கும்படி எழுதப்பட்டிருந்தது. ஜாஃப்ரே இதற்கு தான் உத்தரவாதம் பண்ண முடியாது. ஆனால் கையொப்பம் தரவும் என்னால் இயன்றதைச் செய்யவும் கூடும் என்றார். அப்படியானால் அதன்படி செய்ய உத்தரவு கிடைத்தது.

அடுத்த நாள் காலை ஜாஃப்ரேயும், Dr.மில்லர் என்பவரும் விடுவிக்கப்பட்டனர். கார்னே மற்றும் றே என்பவர்கள் பணயப்பொருள் கொடுக்கப்படும் வரை கைதிகளாயிருந்தனர். ஒரு சில நிமிடங்களில் ஜாஃப்ரேயும் நண்பரும் கள்வர்களை வழியனுப்பி விட்டு, வந்த ஆபத்தான பாதை வழியாகத் திரும்பினர்.

பாதை அதிகக் கஷ்டமாயிருந்தது. சில இடங்களில் உருண்டும், சில இடங்களில் இடறியும் விழுந்தார்கள். பனிக்கட்டியை விட சறுக்கலான பாதை. கால்கள் நொந்து போயின. இறுதியாக தாங்கள் இறங்கி வந்த ஆற்றின் ஓரத்தை அடைந்ததும் கூட வந்த இரு கள்வர்கள் ஒரு படகினை கட்டளையிட்டு விட்டு கரையில் நின்றனர். கவனமாயிருங்கள் நாங்கள் உங்களை கவனித்துக் கொண்டிருப்போம் என எச்சரித்தனர். ஆனால் ஜாஃப்ரே கிறிஸ்துவைப் பற்றி நான் கூறியதை மறக்க வேண்டாம் என்று கூறி பதிலளித்தார். 'பணயக் காசுகளை அனுப்பத் தவறக் கூடாது' என கள்வர்கள் எச்சரித்தனர்.

மிஷனெரிகள் இருவரும் வீடு திரும்பினர்

ஆறு வாரங்களுக்குப் பின் பணயக் காசு சீன அதிகாரிகளால் திரட்டப்பட்டு அனுப்பப்பட்டது. றே தப்பியோடி விட்டார். கார்னே கடினமாக நடத்தப்பட்டதால் நோயுடன் திரும்பினார்.

இவர்களின் கைது காலத்தில் செய்தி, பல்வேறு ஊடகங்கள் வழியாகப் பரப்பப்பட்டு, ஆயிரக்கணக்கானோர் ஜெபித்தனர். தேவன் ஜெபத்தைக் கேட்டார்.

ஆத்துமாக்களைத் தாரும் அல்லது எனது ஆத்துமாவை எடுத்துக் கொள்ளும் . . . ஜியார்ஜ் உவைட்ஃபீல்டு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்பின் எதிரொலி தேவசபையில் பிரசங்கித்ததையே மேலே எழுதியுள்ளேன். "மரியாள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள்" (லூக்கா 10:39) என்று பிரசங்கித்ததைக் கேட்ட திருமணமான இளம் பெண் ஒருவர் என்னிடம் வந்து, "பாஸ்டர், ஆண்டவர் ஒருவிசை என்னோடு பேசினார், இயேசுவை அவருடைய தோள்களுக்கு மேலே கண்டேன், அவர் என்னை பெயர் சொல்லி கூப்பிட்டார்" என்று கூறினாள்.

சென்னை பட்டணத்திற்கு எங்களை அன்புடன் அழைத்து, உபவாச ஜெபத்தை ஒழுங்கு செய்த சென்னை, மணலி அசெம்பிளி ஆப் காட் சபை போதகர் **J.மோகன் ஜெபக்குமார்** அவர்களுக்காகவும், குடும்பத்தினருக்காகவும் ஆண்டவரை துதிக்கிறோம். மீதியான நாட்கள் எங்களை அன்போடு பயன்படுத்திய பாஸ்டர் **S.சாம்செல்வராஜ்** அவர்களுக்காகவும், குடும்பத்தினருக்காகவும் கர்த்தரை துதிக்கிறோம். தேவன் இவர்களையும், ஊழியங்களையும் மென்மேலும் ஆசீர்வதிப்பாராக, ஆமென் *1சாமுவேல் 26:25.*

நான் வாசித்த ஒரு கட்டுரையை வாசகரின் நித்திய பிரயோஜனத்திற்காக கீழே அச்சிடுகிறேன்:

தேவ ஜனமே, உனக்கு முன்பாக உள்ள முடிவில்லாத நீண்ட நித்தியம்!

ஆர்தர் ஸ்டேஸ் (ARTHUR STACE) என்ற மனிதர் *1884*-ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவிலுள்ள ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தார். அவருடைய தகப்பனார் ஊறிப்போன ஒரு குடிகாரன். அவருடைய குடும்பம் ஒருக்காலும் வீட்டிலே குடியிருந்ததில்லை. குடியிருக்க வீடு வாசல் இல்லாத காரணத்தால் அவர்கள் தெருக்களில்தான் குடியிருந்தனர். தெருக்களிலுள்ள வீடுகளில் முந்தின இராக்காலத்தில் கதவண்டையில் வைக்கப்படும் ரொட்டி மற்றும் பால் போன்ற பொருட்களை மேற்கண்ட குடும்பத்தின் குழந்தைகள் தங்களுடைய காலை ஆகாரத்திற்காக திருடினார்கள்.

நம்முடைய ஆர்தர் ஸ்டேசும் தனது தந்தையைப் போலவே முழுமையான குடிகாரனாக மாறி தெருக்களில்தான் வசித்து வந்தார். ஆர்தர் தம்முடைய *40* ஆம் வயது பிராயத்தில் இருந்தபோது பசியாயிருக்கும் ஏழை மக்களுக்கு இலவசமாக உணவு அளிக்கின்ற ஒரு மிஷன் தேவாலயத்திற்குச் சென்றார். இலவசமாக வயிறார அங்கு உணவு உட்கொண்டார். அந்த நாளின் இராக்காலத்தில் குருவானவர் தேவ ஆலயத்தில் சர்வ வல்ல தேவனைக் குறித்து பிரசங்கித்த தேவ செய்தியை ஆர்தர் கவனமாகக் கேட்டார். அதின் காரணமாக அவர் அந்த இராக்காலத்திலேயே இனி கர்த்தருக்கென்று தான் வாழப் போவதாக திட்டமான தீர்மானம் எடுத்தார். அன்றிலிருந்து அவர் தமது குடிப்பழக்கத்தை முற்றுமாக விட்டு விட்டு செஞ்சிலுவை சங்கத்தில் ஒரு வேலையில் அமர்ந்தார். ஆர்தர் எழுதப் படிக்கத் தெரியாத கல்வி ஞானமற்ற மனிதராக இருந்தமையால் செஞ்சிலுவை சங்கத்தில் கிடைத்த வேலையும் ஓர் கீழான வேலையாகத்தான் இருந்தது. இதற்குப்பின் சில காலம் கழித்து *1930* ஆம் வருஷத்தின் பிந்திய பகுதியில் "நித்தியத்தை" குறித்து பிரசங்கித்த ஒரு பிரசங்கியாரின் பிரசங்கத்தை ஆர்தர் கேட்டார். "ஆஸ்திரேலியாவின் தலை நகர் சிட்னி பட்டணத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதரிடத்திலும் "**நித்தியம்**" "**நித்தியம்**" என்று நான் என் தொண்டை கிழிய சத்தமிட ஆசைப்படுகின்றேன்" என்று பிரசங்கியார் தனது பிரசங்கத்தில் உள்ளமுருகிக் கதறினார். "**முடிவில்லா நித்தியத்துடன் மாந்தரின் வாழ்நாட் காலத்தை ஒப்பிடும்போது அது எத்தனை, எத்தனை குறுகியது. எனவே, பூமியில் வாழும் ஒவ்வொரு நாளையும் தனது வாழ்வின் கடைசி நாள் என்று எண்ணி கர்த்தருக்குப் பயப்படும் பயத்தோடும், நடுக்கத்தோடும் மனிதன் ஜீவிப்பது எத்தனை தீராத அவசியமானது**" என்று பிரசங்கியார் தொடர்ந்து பேசினார்.

அந்த தேவ செய்தியைக் கேட்ட ஆர்தர் மேலே குறிப்பிட்ட பிரசங்கியாரின் ஆசை ஆவலை பூர்த்தி செய்ய தேவன் தன்னைத் தெரிந்து கொண்டார் என்ற முழுமையான நிச்சயத்தோடு அந்தக் கூட்டத்திலிருந்து புறப்பட்டுச் சென்றார். ஆர்தர், **ஒரு சாக்பீசை** (கரும் பலகையில் எழுதும் சீமைச்சுண்ணாம்பு குச்சி) கண்டெடுத்து அதை தேவனிடம் காண்பித்து "**ஆண்டவரே, இந்த சாக்பீசைக் கொண்டு "நித்தியம்" என்ற வார்த்தையை ஒரு காங்கிரீட் நடைபாதையில் எழுத எனக்கு உதவி செய்யும்**" என்று ஜெபித்து விட்டு எழுதினார். எத்தனை ஆச்சரியம்! "**நித்தியம்**" என்ற வார்த்தை அழகான வடிவமைப்பில் காங்க்ரீட் நடை பாதையில் காணப்பட்டது.

அடுத்து வந்த கொஞ்ச வருட காலம் ஒவ்வொரு நாள் இரவும் யாரும் அறியாமல் சிட்னி பட்டணத்தின் தெருக்களுக்கு ஆர்தர் நழுவிச் சென்றார். தான் இளைஞனாக இருந்த போதும் அவர் அப்படி அந்தப் பட்டணத்தின் தெருக்களுக்கு நழுவிச் செல்லுவதுண்டு. ஆனால், முந்தைய ஆண்டுகளில் இளைஞனான அவர் குடித்து வெறிப்பதற்கும், திருடுவதற்கும், தான் நித்திரை செய்வதற்கான ஒரு பாதுகாப்பான இடத்தைக் கண்டு பிடிப்பதற்கும் செல்லுவார். ஆனால், இப்பொழுது அவர் "**நித்தியம்**" என்ற வார்த்தையை நமது இந்தியாவின் சென்னைப் பட்டணம் போன்ற பட்டணத்திற்குச் சமமான ஒரு மாபெரும் பட்டணத்தின் தெருக்கள் அனைத்திலும் எழுதும் ஒரு முக்கியமான தேவப் பணியை நிறைவேற்றும் தேவ நோக்கத்தோடு செல்லுகின்றார்.

சிட்னி பட்டண மக்கள் யாவரும் "நித்தியம்" என்ற அந்த ஆச்சரியமான வார்த்தையைக் குறித்து தங்களுக்குள் பேசிக் கொண்டனர். ஆர்தர் தனது எழுத்துப்பணியை மிகவும் உண்மையாகச் செய்ததால் எந்த ஒரு மழைக்குப் பின்னரும் தெருக்களை சுத்தம் செய்வோர் எத்தனைதான் தண்ணீர் அடித்து சுத்தம் செய்த போதிலும் அந்த "நித்தியம்" என்ற எழுத்துக்கள் துலக்க மாகத் தெரிந்தன. ஆர்தர் ஸ்டேஸ் இராக் காலங்களில் தனது சாக்பீசால் தனது பிடித்தமான "நித்தியம்" என்ற வார்த்தையை அழுத்தமாக அழகாக எழுதிக் கொண்டிருக்கும் போது வெகு சிலர் மாத்திரமே பார்த்திருக்கின்றனர். ஆனால், அவர் யார்? அவர் பெயர் என்ன? அவர் எங்கு வசிக்கின்றார்? என்ற விபரம் எதுவும் அவர்களில் எவருக்கும் தெரியாது. ஆஸ்திரேலியாவிலுள்ள செய்தி தாட்கள் அவருக்கு **தீருவாளர் நித்தியம்** என்று பெயர் சூட்டி அழைத்தன.

ஆர்தர் தனது "நித்தியம்" என்ற வார்த்தையை தெருக்கள், திண்ணைகள்,வீதிகள் போன்ற இடங்களில் மாத்திரம் அல்ல வெகு அசாதாரணமான இடங்களிலும் எழுதினார். அப்படிப் பட்ட இடங்களில் ஒன்று, சிட்னி பட்டணத்தின் டவுண்ஹால் மணிக் கூண்டாகும். டவுண்ஹால் கோபுரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் அந்த பெரிய மணி அந்தக் குறிப்பிட்ட நாள் இராக்காலம் கீழே தரையில்தான் இருந்தது. அடுத்த நாள் காலைதான் அந்த மணியை புதிய மணிக்கூட்டுக்கு உயர்த்த தீர்மானித்திருந்தனர். அந்த பெரிய மணிக்கு உட்புறமாக ஆர்தர் தனது கை வண்ணத்தைக் காட்டி "நித்தியம்" என்ற எழுத்தை சாக்பீசால் யாரும் காணாதவாறு அந்த இராக் காலத்தில் அச்சரமாக எழுதிவிட்டுச் சென்றார். *60* ஆண்டுகள் கடந்து விட்ட போதினும் அந்த எழுத்து இன்று வரை அப்படியே இருப்பதாகச் சொல்லப் படுகின்றது.

பல்லாண்டு காலம் ஆர்தர் இவ் வண்ணமாக "நித்தியம்" என்ற வார்த்தையை சிட்னி பட்டணத்தின் தெருக்களிலே இரகசியமாக எழுதிக் கொண்டிருந்தார். இதன் பின்னர் ஒரு நாள் ஒரு தேவ ஆலயத்தின் வெளிப்புறக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்ட ஒரு நண்பர் "நித்தியம்" என்ற வார்த்தை மேற்கண்ட தேவ ஆலயத்தின் குறுக்கு வழித்தடத்தில் எழுதப்பட்டிருப்பதையும் ஆலய ஆராதனை நடந்து கொண்டிருந்த சமயம் ஆர்தர் ஸ்டேஸ் அதின் அருகே நின்று கொண்டிருப்பதையும் கவனித்தார். நீங்கள்தான் "**தீருவாளர் நித்தியமா?**" என்று மேற்கண்ட மனிதர் ஆர்தரைக் கேட்டார். இனி தனது உண்மை நிலையை மூடி மறைக்க முடியாது என்பதை உணர்ந்த ஆர்தர், தனது உள்ளத்தில் குற்ற உணர்வுடன் "மேன்மை தங்கிய கனவானே, அந்த திருவாளர் நித்தியம் நானேதான்" என்று பதில் கூறினார். அத்துடன் அந்த மனிதரைப் பார்த்து "இந்தக் காரியத்தை இரகசியமாக உங்கள் மட்டாக வைத்துக் கொள்ளுங்கள். தயவு செய்து யாருக்கும் சொல்லி விடாதேயுங்கள்" என்று அவரை மன்றாடி கேட்டுக் கொண்டார். அதற்குள்ளாக அந்த வார்த்தை ஆலய குருவானவருடைய காதுகளுக்கு எட்டவே அவர் நமது ஆர்தரைப் பார்த்து பத்திரிக்கை அலுவலகங்களுக்குச் சென்று தனது வாழ்க்கை சரிதையை கூறும்படிச்

சொன்னார். ஆஸ்திரேலியாவின் செய்தித் தாட்கள் ஆர்தரை வெகு அன்போடு வரவேற்று அவரை ஒரு மறக்க முடியாத சரித்திரமாகவே செய்து விட்டன. பத்திரிகையாளர்கள் ஆர்தர் ஸ்டேசின் வாழ்க்கை வரலாற்றை வெகு தெளிவாகக் கேட்டறிந்து "நித்தியம்" என்று யாரும் அறியா வண்ணம் இத்தனை நீண்ட ஆண்டு காலம் எழுதிக் கொண்டிருக்க வேண்டியதன் அவசியத்தையும் அந்த வார்த்தை அவரது வாழ்க்கையை எப்படி இவ்வண்ணமாக எழுதும்படி ஏவி விட்டது? என்றும் கேட்டு தெளிவான விளக்கம் பெற்றுக் கொண்டனர். இப்பொழுது ஆர்தர் ஸ்டேஸ், ஆஸ்திரேலியா நாட்டின் புகழ் பெற்ற மனிதராக வெகு கண்ணியமாக மதிக்கப் பட்டார். கடந்து சென்ற ஆண்டுகளில் மற்ற மனிதருக்கு பயந்து இராக்காலங்களில் மாத்திரம் தனது இருதயத்திற் குகந்த "நித்தியம்" என்ற வார்த்தையை எழுதினது போல ஆர்தர் இனி எழுத வேண்டிய அவசியமில்லாமற் போயிற்று. இப்பொழுது அவர் தனது மன விருப்பப்படி சிட்னி பட்டணத்தில் மாத்திரம் அல்ல, ஆஸ்திரேலியாவின் எந்த ஒரு பட்டணத்தின் எந்த ஒரு தெருவிலும் சென்று எழுத அரசாங்கம் அவருக்கு பூரண அனுமதி கொடுத்தது. அவரது அந்த பரிசுத்தமான பணியை இனி ஆஸ்திரேலியா போலீசார் கூட தடுக்க வியலாது.

அந்த பொன்னான வாய்ப்பை நமது ஆர்தர் ஸ்டேஸ் நல்லவிதமாக பயன் படுத்திக் கொண்டார். உடனடியாக தனது அற்பமான உலக வேலையை விட்டுவிட்டு தனக்கு மாதந்தோறும் கிடைத்த சொற்பமான முதிர் வயது பென்சன் பணத்தைக் கொண்டு வாழ்ந்தபடியே தனது பரிசுத்தமான தேவ ஊழியத்தைத் தொடர்ந்தார்.

1967 ஆம் ஆண்டு தமது 83 ஆம் வயது நிறைவடையும் போது ஆர்தர் ஸ்டேஸ் "நித்தியம்" என்ற வார்த்தையை 5 (ஐந்து) லட்சம் தடவைகள் சாக்பீசால் எழுதி முடித்திருப்பது கணக்கிடப் பட்டது.

ஃஃஃஃஃஃஃ

எனக்கு மிகவும் அருமையான தூதன் வாசகரே, தேவன், மோட்சம், மரணம், நித்திய நரகம் போன்ற எதுவுமே இல்லை என்று எண்ணின ஒரு நாத்திகனின் "**மரண வாக்குமூலம்**" கீழே அச்சிடப்படுகிறது:

"**அவியாத அக்கினியின் உபாதையை ஆயிரம் ஆண்டுகள் அனுபவித்தாவது ஆண்டவரின் கிருபையைப் பெற்று அவரண்டை திரும்பக் கூடுமானால் நலமாயிருக்குமே. ஆனால் அது வீண் நம்பிக்கை. கோடா கோடி ஆண்டுகளும் என் வேதனைக்கு முடிவுண்டாக்காதே. நித்தியமே, ஆ நித்தியமே, நரகத்தின் தாங்க முடியாத வேதனைக்கு முடிவேயில்லையே.**"

மரித்த பின்னர் மோட்சமா அல்லது நரகமா என்ற சந்தேகத்துக்கிடமான கேள்வி அல்ல, மெய்யான தேவ மக்களுக்கு இந்த உலகத்திலேயே அவர்கள் இருதயத்தில் மோட்சம் ஆரம்பித்து அவர்கள் மரித்த பின்னர் அந்த மோட்ச வாழ்வு பரலோகத்திற்கும் தொடருகின்றது. ஆண்ட்ரூ போனர் என்ற பரிசுத்தவான் சொன்னதுபோல "**உனக்கு இரண்டு மோட்சம் இல்லையேல் ஒரு மோட்சமும் இல்லை. பூலோகத்தில் உனக்கு மோட்சம் இல்லையெனில் பரலோகத்திலும் மோட்சம் கிடையாது**".

வாசகர் கடிதம் அல்லது மணியாடர் மூலம் **எங்களை தொடர்பு கொள்ளும் ஒவ்வொரு தடவையும் தவறாமல் உங்கள் போன் அல்லது மொபைல் நம்பரை எழுதுங்கள். வங்கி வழியாக பணம் அனுப்பினால் தயவாய் உடனே எங்களுக்குத் தெரிவியுங்கள். அது, உங்கள் பெயரில் ரசீது போட எங்களுக்கு மிகவும் உதவியாயிருக்கும். வருகையின் தூதன் பத்திரிகை பணியிலும், தூதன் அலுவலகத்திலும், உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபங்களை ஆங்காங்கே சென்று ஒழுங்கு பண்ணுவதிலும் எனக்கு மிகவும் உதவியாயிருப்பது மகன் W.சாமுவேல் ஃபின்னி என்பதை வாசகருக்கு அன்புடன் அறிவிக்கிறேன்.**

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

முகவரி மாறுதல் மற்றும் பத்திரிகை வரத்தவறினால் தெரிவிக்கவும், M.O. மூலம்/ வங்கி வழியாக காணிக்கை அனுப்பினால் அறிவிக்கவும் வேண்டிய அலுவலக தொலைபேசி எண்கள்:

95432 21008
04652 403295 (10.00 - 1.00;2.00-6.00)
94897 40295 ஞாயிறு விடுமுறை

ஜெபத்திற்காக மட்டும் இந்த தொலைபேசியை உபயோகியுங்கள்
94980 30295 (10.00 -1.00; 2.00-6.00)

பத்திரிகை செய்திகள்

ஆகஸ்டு மாதத்தில்

பயணிகள் வாகனங்கள் விற்பனை 14% அதிகரிப்பு

செப்டம்பர் 12

இந்தியாவில், கடந்த ஆகஸ்டு மாதத்தில், கார்கள் உள்ளிட்ட பயணிகள் வாகனங்கள் விற்பனை 14 சதவீதம் அதிகரித்துள்ளது.

ஆகஸ்டு மாதத்தில், உள்நாட்டில் 2,94,335 பயணிகள் வாகனங்கள் விற்பனை ஆகி உள்ளது. சென்ற ஆண்டின் இதே மாதத்தில் அது 2,58,737 -ஆக இருந்தது. ஆக, விற்பனை 14 சதவீதம் அதிகரித்துள்ளது. இதில் கார்கள் விற்பனை மட்டும் 12 சதவீதம் அதிகரித்து 1,98,811-ஆக உயர்ந்துள்ளது.

ஆகஸ்டு மாதத்தில் மோட்டார் சைக்கிள் விற்பனை 11,35,699-ஆக இருக்கிறது. கடந்த ஆண்டின் இதே மாதத்துடன் ஒப்பிடும்போது இது 13 சதவீதம் அதிகமாகும். இரு சக்கர வாகனங்கள் விற்பனை, ஒட்டுமொத்த அளவில் 15 சதவீதம் அதிகரித்து 18,91,062-ஆக உயர்ந்துள்ளது. வர்த்தக வாகனங்கள் விற்பனை 23 சதவீதம் உயர்ந்து 65,310-ஆக அதிகரித்துள்ளது.

கடந்த மாதத்தில், ஒட்டுமொத்த அளவில் அனைத்து வகையான மோட்டார் வாகனங்களின் விற்பனை 23,02,158-ஆக இருக்கிறது. சென்ற ஆண்டின் இதே மாதத்துடன் ஒப்பிடும்போது இது 14 சதவீத வளர்ச்சியாகும்.

மும்பை சந்தையில்

மாருதி சுசுகி இந்தியா நிறுவன பங்கு விலை ரூ.8,145-ஐ எட்டியது

மும்பை சந்தையில் நேற்று மாருதி சுசுகி இந்தியா நிறுவன பங்கு விலை ரூ.8,145-ஐ எட்டியது.

மாருதி சுசுகி நிறுவனத்தின் கார்கள் விற்பனை, வருவாய் மற்றும் லாப வளர்ச்சி நிலவரங்கள் சிறப்பாக இருக்கின்றன. எனவே இந்நிறுவனப் பங்கு விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தற்போது இந்நிறுவனப் பங்குகளின் ஒட்டு மொத்த சந்தை மதிப்பு ரு.2.46 லட்சம் கோடியாக உள்ளது. இந்திய மோட்டார் வாகன துறையில் இந்நிறுவனம்தான் பங்குகளின் ஒட்டு மொத்த சந்தை மதிப்பு அடிப்படையில் ரூ.2 லட்சம் கோடியை தாண்டிய முதல் நிறுவனமாகும்.

மும்பை பங்குச்சந்தையில், திங்கட்கிழமை அன்று வர்த்தகம் தொடங்கியபோது மாருதி சுசுகி பங்கு ரு.7,990-க்கு கைமாறியது. வர்த்தகத்தின் இடையே அதிகபட்சமாக ரூ.8,169-க்கும், குறைந்தபட்சமாக ரூ.7,970,35-க்கும் சென்றது. இறுதியில் ரூ.8,145-ல் நிலைகொண்டது. இது, சென்ற வார இறுதி நிலவரத்துடன் ஒப்பிடும்போது 2.16 சதவீத ஏற்றமாகும்.

தினத்தந்தி

Registered with the Registrar of News Paper For India under R.N.I. TN TAM 11967/'67
Postal Reg. No. KKI/63/2015-2017
Date of Publication : 27th of Every month
Date of Posting : 27th & 28th of Every month

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

To